**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் – சிறப்புப் பள்ளிகள் – அரசு தொழிற் பயிற்சி மையம் மற்றும் அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப்பள்ளி, தொழிற்பிரிவு மாணவ, மாணவிகளுக்கு 4 இணை விலையில்லா சீருடைகள் வழங்கும் திட்டம் – 2014–2015 ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.13,96,000/– நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (டி) எண்.36** **நாள்: 31.10.2014**

**ஜய–ஐப்பசி 14, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:**

1. அரசு ஆணை.(டி) எண்.07, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1.1) துறை, நாள் 02.08.2013
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.3281/சிபதி/2014, நாள் 01.10.2014.

------

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 23 அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 1720 மாணவ/மாணவிகளுக்கு தலா ரூ.200/– விலையிலும், அரசு தொழிற்பயிற்சி மையம் மற்றும் பூவிருந்தவல்லி, அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, தொழிற் பிரிவில் பயிலும் 55 மாணவர்களுக்கு தலா ரூ.250/– விலையிலும் 4 செட் விலையில்லா சீருடைகள் தைத்து வழங்க (தையற்கூலியுடன் சேர்த்து), 2013–2014 ஆம் ஆண்டுக்கு திட்டத் தொடராணையும், ரூ.14,31,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், 2014–15 ஆம் நிதியாண்டிற்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ், 23 அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 1342 மாணவ / மாணவியர்களுக்கு தலா ரூ.250/– விலையில் 4 இணை சீருடைகளுக்கு ரூ.13,42,000/–ம், அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, தொழிற் பயிற்சி பிரிவில் 45 மாணவ / மாணவியருக்கு தலா ரூ.300/– விலையில், 4 இணை சீருடை வழங்கிட ரூ.54,000/–மும், ஆக மொத்தம் 1387 மாணவ / மாணவியருக்கு தையற்கூலி தொகையும் சேர்த்து ரூ.13,96,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, 23 அரசு சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு தொழிற்பயிற்சி மையம் மற்றும் பூவிருந்தவல்லி, அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, தொழிற் பிரிவில் பயிலும் மாணவ / மாணவியருக்கு 4 செட் விலையில்லா சீருடைகள் தைத்து (தையற் கூலியுடன் சேர்த்து) வழங்க, 2014–2015 ஆம் ஆண்டுக்கு திட்டத் தொடராணையும், இத்திட்டத்திற்கென ரூ.13,96,000/–க்கு

**[த.பி.பா]**

பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது:-

| | | | |
|---|---|---|---|
| 1. | 23 அரசு சிறப்புப் பள்ளி மாற்றுத் திறனாளி மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 1342 | 1342 x ரூ.250 x 4 = | ரூ.13,42,000/– |
| 2. | பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லியில் தொழிற் பயிற்சி பிரிவு மாணவ மாணவியர்கள் எண்ணிக்கை 45 | 45 x ரூ.300 x 4 = | ரூ.54,000/– |
| | **மொத்தம்** | | **ரூ.13,96,000/–** |

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.13,96,000/–ஐ உரிய கணக்குத் தலைப்புகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வரவு–செலவு திட்ட மதிப்பீட்டிற்குள் செலவினம் மேற்கொள்ளுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 101–மாற்றுத்திறனாளிகள் நலன் – I-திட்டத்தில் சேராதது – AA-பார்வையற்றோர் பள்ளி – 46–உடைகள் கூடாரச் செலவுகள், பண்டக சாலைப் பொருள்கள்” (து.தொ.கு.2235–02–101–AA-4601).**

6. இவ்வாணை, நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.58182/நிதி(சந)/2014, நாள் 28.10.2014–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,சென்னை–78.
சமூக நல இயக்குநர், சென்னை–5.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
கைத்தறி, கைவினைப்பொருட்கள் மற்றும் கதர்துறை இயக்குநர், சென்னை–108.
நிர்வாக இயக்குநர், கோ–ஆப்டெக்ஸ், சென்னை–6.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

<u>நகல்</u>

மாண்புமிகு அமைச்சர் (சமூகநலம்) அலுவலகம், சென்னை–9.
பள்ளிக் கல்வித்துறை, சென்னை–9.
நிதி (ச.ந.) துறை, சென்னை–9.
நிதி (கல்வி) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.